**செய்தி வெளியீடு எண்: 895** **நாள்: 12.10.2010.**

'டாஸ்மாக்' நிறுவனத்தின் 30 ஆயிரம் பணியாளர்களுக்கு 20 சதவீத போனஸ்

20 கோடியே 11 இலட்ச ரூபாய் வழங்கப்படுகிறது

முதலமைச்சர் கலைஞர் ஆணை

டாஸ்மாக் நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், தற்காலிகப் பணியாளர்கள், "சி" மற்றும் "டி" பிரிவுகளைச் சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் இந்த அரசு 2006இல் பொறுப்பேற்ற பிறகு கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டது போலவே 2009-2010ஆம் ஆண்டிற்கும் 8.33 சதவீதம் போனஸ் மற்றும் 11.67 சதவீதம் கருணைத் தொகை சேர்த்து மொத்தம் 20 சதவீதம் போனஸாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் காரணமாக, ஏறத்தாழ 30 ஆயிரம் 'டாஸ்மாக்' நிறுவனப் பணியாளர்களுக்கு மொத்தம் 20 கோடியே 11 இலட்ச ரூபாய் போனஸாக வழங்கப்படுகிறது.

**வெளியீடு:—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**